05.11.2025. O.S.No.88 of 2024 P.W.1 - **தீனதயாளன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரூபாய் 10 லட்சம் பணம் வாங்கிக்கொண்டு தரவில்லை அதனால் தாக்கல் செய்துள்ளேன். பணம் திருப்பி கொடுக்க வேண்டும் என்பதைத்தவிர வேறு பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் பணம் தரவில்லை என்றால் சொத்தை ஜப்தி செய்யக்கோரியும் கேட்டுள்ளேன். சொத்தை ஜப்தி செய்வதற்கான நீதிமன்ற கட்டணத்தை நான் செலுத்தவில்லை என்றால் வக்கீல் பீஸ் கேட்டார் கொடுத்துவிட்டேன் இது எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கும் எனக்கும் எப்படி பழக்கம் என்றால் டைல்ஸ் குடோன் கட்டுவதற்காக பிரதிவாதியின் அண்ணனிடமிருந்து ஒரு ஏக்கர் 20 செண்ட் வாங்கினேன் அந்த வகையில் தெரியும். பிரதிவாதியின் அண்ணன் பெயர் பெருமாள். அந்த விற்பனையில் பிரதிவாதி சாட்சி கையொப்பம் போட்டிருந்தார் என்றால் சரிதான். வேறு எந்த விதத்திலும் பிரதிவாதிக்கும் எனக்கும் பழக்கம் இல்லை என்றால் 2020 லிருந்து மரம் இழைக்கும் கடை உள்ளது. அங்கு நாங்கள் இருவரும் அடிக்கடி பார்த்துக்கொள்வோம். என்றைக்கு பணம் வேண்டும் என்று பிரதிவாதி கேட்டார் என்றால் 2022 ம் ஆண்டு மே மாதம் 01 ம் தேதி கேட்டார். என்றைக்கு நான் பணம் கொடுத்தேன் என்றால் 15.05.2022 அன்று கொடுத்தேன். அன்று குடியாத்த்தில் கெங்கை அம்மன் கோவில் திருவிழா.

அன்று வேலூர் மாவட்டம் பொதுவிடுமுறை என்றால் அன்று ஞாயிற்றுக்கிழமை. எத்தனை மணிக்கு பணம் கொடுத்தேன் என்றால் காலை 09.30 மணிக்கு தோராயமாக இருக்கும். எங்கு வைத்த கொடுத்தேன் என்றால் எனக்கு சொந்தமான டைல்ஸ் கடையில் வைத்து கொடுத்தேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பாண்டை யார் எழுதியது என்றால் கோவிந்தராஜ் என்பவர் எழுதினார். அவர் பத்திரம் எழுதுபவரா என்றால் பத்திர எழுத்தரிடம் வேலை செய்பவர். சாட்சி யார் கையொப்பம் போட்டது என்றால சந்தோஷ்குமார் த/பெ. கிருஷ்ணன் என்பவர் போட்டார். சுப்பிரமணி என்பவரை பிரதிவாதி அழைத்து வந்தார் அவரும் சாட்சி கையொப்பம் செய்தார். சுப்பிரமணியின் அப்பா பெயர் நினைவில்லை. சுப்பிரமணி பிச்சனூர், குடியாத்தத்தை சேர்ந்தவர். அவருடைய விலாசம் தெரியுமா என்றால் தெரியாது. அவர் பிரதிவாதியுடன் வந்தார்.

தாவா புரோநோட்டில் யார் ஸ்டேம்ப் ஒட்டியது என்றால் பத்திரம் எழுதியவர் ஒட்டி எடுத்து வந்தார். ஸ்டேம்ப் ஒட்டிய பின்னர்தான் பிரதிவாதி கையொப்பம் போட்டாரா என்றால் முதலில் பாண்டு எழுதிவிட்டோம். அதன் பின்னர் 09.30 மணிக்கு வந்து பிரதிவாதி கையொப்பம் போட்டார். நான் தாக்கல் செய்த புரோநோட்டு என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் சரிதான். அதில் கீழே உள்ள கையொப்பத்திற்கு மேல் தான் ஸ்டேம்ப் ஒட்டப்பட்டுள்ளது என்றால் தவறு. அவ்வாறு ஒட்டவில்லை. பிரதிவாதி என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றும் நான் பெருமாளிடம் வாங்கி பத்திரத்தில் கண்ணன் போட்ட கையெழுத்தை பார்த்து இந்த பாண்டை அவசர

கோலத்தில் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பாண்டின் பின்புறம் பார்க்கும்போது கையொப்பத்திற்கு மேல் தான் ஸ்டேம்ப் ஒட்டப்பட்டுள்ளது என்று தெரிகிறது என்றால் அவ்வாறு தெரியவில்லை. தாவாவுடன் தாக்கல் செய்துள்ள சொத்துகள் அனைத்தும் விவசாய நிலங்கள் என்றால் விவசாய நிலங்கள் மற்றும் காலி மனைகள் உள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் தாவா சொத்து விவரத்தில் வீட்டு மனை எங்காவது காண்பிக்கப்பட்டுள்ளதா என்று பார்த்து சொல்லும்படி கேட்கப்பட்டது சாட்சி ஆவணத்தை பார்த்து எதுவும் இல்லை நிலம் மட்டும்தான் உள்ளதாக சொல்கிறார்.

நான் வழக்கு பதிவு செய்வதற்கு முன்பு நோட்டீஸ் கொடுத்தேன். அதற்கு பதில் அறிவிப்பு பிரதிவாதி கொடுத்தார் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த நோட்டீஸ் சங்கதிகளை மறுத்து நான் மறு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

பதில் அறிவிப்பில் சொல்லப்பட்ட சங்கதிகளை நான் ஒத்துக்கொண்டுதான் அதற்கு நேர் மாறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் பிரதிவாதியின் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றால் அது 14 பேர் கூட்டாக சேர்ந்து வாங்கிய சொத்துக்கள். அதில் அவரின் குடும்ப உறுப்பினர்கள் யாரும் இல்லை. ஒரே ஒரு சொத்து ஆவணத்தைத்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

இந்த சொத்து விவரங்கள் குறித்து இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 27/2021 என்ற பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது. கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் பாகப்பிரிவனை ஆவதற்கு முன்பு வழக்கில் கண்டுள்ள சொத்துக்களை ஜப்தி செய்ய முடியாது என்றால் சரியல்ல. அவரின் பாகத்தை அவரின் மனைவி பெயரில் பதிவு செய்து கொடுத்துள்ளார். பிரதிவாதி என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றும் வா.த.சா.ஆ.1 ஐ அவர் எழுதிக்கொடுக்கவில்லை என்றும் அவரிடமிருந்து சொத்துக்களை பறிப்பதற்காக தாவா பாண்டை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதில் உள்ள கையொப்பம் அவருடையது அல்ல என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

என் தகப்பனார் பிரதிவாதியின் பெயரில் 30.11.2023 அன்று செக் பவுன்ஸ் ஆகிவிட்டது என்று ஒரு அறிவிப்பு கொடுத்திருந்தாரா என்றால் நான்தான் கொடுத்தேன். என் தகப்பனார் பெயர் எம்.முனுசாமி. 07.11.2023 அன்று செக் பவுன்ஸ் ஆகிவிட்டது என்று என் தகப்பனார் ஒரு அறிவிப்பு கொடுத்தாரா என்றால் காசோலை தேதி 07.11.2023 ஆகும். அதை வசூலுக்காக தாக்கல் செய்தது 09.11.2023 ஆகும். அதன் பின்னர்தான் அறிவிப்பு கொடுத்துள்ளார். அதன் பின்னர் கண்ணன் ஒரு பதில் அறிவிப்பு கொடுத்தார் என்றால் கொடுத்திருப்பதாக சொன்னாரகள். காசோலை வழக்கு எதையும் தாக்கல் செய்யவில்லை.

சாட்சி தாமாக முன்வந்து என் பெயரில்தான் காசோலை பிரதிவாதி கொடுத்தார் என்கிறார். அந்த காசோலையின் பெயரில்ள ந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. அந்த காசோலையும் கூட என்னால் தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றும் அதனால்தான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும், அது காலம் கடந்து போய்விட்டதால் அந்த கையொப்பத்தை பார்த்து இந்த தாவா புரோநோட்டை தயார் செய்துக்கொண்டேன் என்றால் தவறு. காசோலை பவுன்ஸ் ஆன பணத்தைக்கூட நான் அவரிடம் திரும்ப கேட்கவில்லை என்றால் பாண்டுக்காகத்தான் காசோலை கொடுத்தார். வங்கி கணக்கிலிருந்து காசோலை மூலமாக பணம் எடுத்துக்கொள்ளுமாறு சொன்னார். காசோலை பவுன்ஸ் ஆகிவிட்டது. குறைந்தபட்ச தொகை இல்லை என்று அவரின் வங்கி கணக்கு Close ஆகிவிட்டது. No such Account என்று வந்துவிட்டது. அதன் பிறகு கேட்டேன் அவர் சரியாக பதில் சொல்லவில்லை மீண்டும் கால தாமதம் செய்தார். அதனால் வழக்கு போட்டு வாங்கிக்கொள்ளலாம் என்று இந்த பாண்டை வைத்து வழக்கு போட்டேன்.

மேற்சொன்ன சங்கதிகளை என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலேயோ, தாவாவிலோ சொல்லவில்லை என்றால் சொல்லியிருப்பேன், பார்க்க வேண்டும். பிரதிவாதி ஏற்கனவே என்னிடம் கடன் வாங்கியது உண்மைதான் என்றும் அவர் காசோலை கொடுத்து அந்த காசோலை மூலம் அந்த பணதகை திருப்பி கொடுத்துவிட்டார் என்றும் மேற்கொண்டு பணத்தை பறிக்க இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு.

வழக்கில் உண்மைத்தன்மை இல்லை என்பதால் வழக்கை பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2025.11.05 16:39:49 +0530